In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| Spl.C.C.No. 35/2014 | Prosecution witness P.W.27 |
| Name: C.Senthilkumar | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.01.2026.

**(Accused present.)**

முதல் விசாரணை :–

நான் தாராபுரத்தில் வட்டாரபோக்குவரத்து அலுவலகராக பணியாற்றி கடந்த 31.07.2024ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். 2007ம் வருடத்தில் பழனி வட்டா போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக 31.05.2007 முதல் பணியாற்றி வந்தேன். திண்டுக்கல் லஞ்சஒழிப்பு அலுவலகத்தில் இருந்து வந்த கடித எண்.RC/172/2005 /FOR/DL/நாள்14.07.2007 தேதியிட்ட கடிதத்தில் கோரியுள்ளபடி TN–57–X–6161 என்ற மகேந்திரா ஜீப் வாகனத்திற்குரிய பி–பதிவேடு விவரங்களைக் கேட்டிருந்தார்கள். அதன்படி எங்களது கடித எண்.09856/A1/2007 dated 18.07.2007ன்படி மேற்படி வாகனத்தின் பி –பதிவேட்டின் விவரங்களை அனுப்பி வைத்தேன். மேற்படி வாகனம் கொடைக்கானல் திருப்பதி த/பெ காசி என்பவரின் பெயரில் இருந்தது திரு.குமார் த/பெ வீரப்பன், விராலிப்பட்டி, நிலக்கோட்டை என்பவர் பெயருக்கு 7.05.2004 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த வாகனத்திற்கு பாண்டியன் பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் 9.6.2004ம் தேதி முதல் தவணை கொள்முதல் (Hire purchase) செய்யப்பட்டிருந்த விவரம் பி– பதிவேட்டின்மூலம் தெரியவந்தது. மேற்படி புதிய வாகனம் 20.06.2000ம் தேதி மேற்படி திருப்பதி பேரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு வரியாக ரூ.660

எங்கள் அலுவலகத்தில் 19.06.2000 ம் தேதியில் செலுத்தப்பட்டுள்ளது. அந்த பி பதிவேட்டின் விவரங்கள் அடங்கிய கோப்பு அதசாஆ.86. அதில் மேற்படி விவரங்கள் பி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளை என் கடிதத்தின் மூலம் லஞ்சஒழிப்பு போலீசாருக்கு வழங்கியது முதல் 2 பக்கத்தில் மேற்படி கோப்பில் உள்ளதுதான். அது அதசாஆ.87. இது சம்மந்தமாக என்னை லஞ்சஒழிப்புப்போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–

மேற்படி ஜீப் 2000 ம் வருடத்தில் திருப்பதி என்பவர் பெயரில் பதிவாகி உள்ளது என்றால் சரிதான். 2004 ம் வருடம் மேற்படி வாகனம் பாண்டியன் பைனான்சில் குமார் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த கடிதத்தில் தேதியில் (18.07.2007) பேனாவால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.01.28 17:37:27 +0530

Principal District Judge,
Dindigul.